போடவில்லை என்று கேட்கும் நிலைமை வரக்கூடும். இந்த சங்கடங்கள் எல்லாம் வரும் என்பதால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்தேன்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, பல இடங்களில் போக்குவரத்துத் துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் பொருத்தம் இல்லாமல், ஒருங்கிணைப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் பல இடங்களில் வழித்தடங்கள் போட்டும் பஸ் போகவில்லை. இது அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுத்து, எல்லா வழித்தடங்களிலும் பஸ்களை விட அரசுக்கு எண்ணம் இருக்கிறதா?

(முற்பகல் 10.20.)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதைப் பற்றி வேண்டுமானால் இப்படி யோசிக்கலாம். அங்கேயிருந்து இங்கு வருகிற குறிப்புகளை நாம் ஆலோசனை செய்வதற்காக தலைவர்கள் மட்டத்தில் வேண்டுமானால் கட்சிக்கு ஒருவராகப்போட்டு ஆலோசனைக் கூட்டத்தில் அவைகளைப்பற்றி ஒரு முடிவு எடுக்க இங்கே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் பதநீர் காய்ச்ச நவீன கருவிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண். 224—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கருப்பட்டி உற்பத்தி செய்து பதநீர் காய்ச்சும் நவீன கருவிகள் வாங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 24.566 லட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைப் பொருள் உற்பத்தி தொழில் பேட்டை அமைக்க அரசு அனுமதித்துள்ள திட்டத்தில் நவீன முறை மூலம் பதநீர் காய்ச்சுவதற்கான கருவிகள் வாங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இக்கருவியை மேற்படி தொழிற் பேட்டையை நிறுவுவதற்கான இடத் தேர்வு செய்யப்பட்டு, இராமநாதபுரம் மாவட்டம் மாயனூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கட்டி, உற்பத்தி செய்து, பதநீர் காய்ச்சும் பணியில் நவீன கருவிகளைப் பயன்படுத்துவதால், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கப்படுமா? அது மட்டும் அல்லாமல், அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தக் கருவியை இயக்குவதற்கு பயிற்சி அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் வேலை வாய்ப்பு பாதிக்கப்படாது. இதற்கு முன்பு சூரிய வெப்ப ஆற்றலிலிருந்து, பதநீரிலிருந்து கருப்புக்கட்டிக்கான பாகை தயாரித்து வந்தார்கள். இப்போது நவீன கருவிகளின் வாயிலாக, மூடப்பட்ட நீராவி கொப்பரை மூலம் பதநீரிலிருந்து பாகு தயாரிக்கிறார்கள். இதற்கான செலவு ரூ. 6 லட்சம் ஆகிறது. இதன் வாயிலாக தொழிற் பேட்டை எனப்படும் பல்மைரா காம்பிளக்ஸ் போடுகிற இடத்தில் தான் நவீன கருவிகளை அறிமுகப்படுத்தப்படுகிற காரணத்தால் வேலை வாய்ப்பு அதிகமாகிறதே தவிர, வேலை வாய்ப்பு குறைய வாய்ப்பு இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூரில் மரம் ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், அந்த நவீன கருவிகளை அங்கே அறிமுகப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுர மாவட்டத்தின் கிழக்கில் தான் மாயூரில் பல்மைரா காம்பிளக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டை இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லி புத்தூர் இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்கில் இருக்கிறது. மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களின் சொந்தத் தொகுதியாக அது இருக்கிற காரணத்தால் அதற்கு பெருமை சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் வேறு எங்குமே இல்லாத முறையில், பனை சம்பந்தப்பட்ட ஒரு ஆராய்ச்சிப் பண்ணை தொடங்கப்பட்டு, வெகு சிறப்பாக ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னமும் அங்கே பனை மரத்தை நம்பி வாழ்கிற தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் வேலை வாய்ப்பைக் கொடுக்கிற வாயிலாக, ஸ்ரீவில்லிப்புத்தூரில் பல்மைரா காம்பிளெக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டையினை கட்டுவதற்கான ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பெறும்.

1983 பிப்ரவரி 10]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் எடுக்கும் தொழிலாளர்கள் பதநீரை இறக்கி காய்ச்சி அதனை கருப்பட்டி ஆக்குகின்ற அந்த வேலை அவர்களுக்கு மிகவும் கடின மான வேலையாகும். கருப்பட்டியினுடைய விலையும் குறைவான தாகும். விறகு கிடைப்பதும் பற்றாக்குறையாக இருக்கிறது. விற கினுடைய விலையும் அதிகமாக உள்ளது. அவர்கள் காய்ச்சும் கருப்பட்டிக்கு போதுமான விலை கிடைக்கவில்லை. ஆகவே, ஏதாவது ஒரு கிராமத்தை முன் உதாரணமாக எடுத்து கொண்டு, 100 தொழிலாளர்கள் இறக்கும் பதநீரை ஒருங் கிணைத்து ஒரே இடத்தில் கொண்டு வந்து, மின்சாரம் தாராள மாகக் கிடைக்கின்ற நேரத்தில், மின்சாரத்தைப் பயன்படுத்தி கருப்பட்டியை தயார் செய்தால், மிகக் குறைந்த செலவில் அதனை உற்பத்தி செய்ய முடியும். அந்த வகையில் அதனை அமுல் நடத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா? அந்த வகை யில் அமுல் நடத்துகிற நேரத்தில், அந்தப் பனை ஏறும் தொழி லாளர்கள் மாநிலத்தில் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 கேள்விகளை இணைத்து ஒரே கேள்வியாக கேட்டிருக்கிறார்கள். பனை ஏறும் தொழிலா ளர்களின் சிரமங்களை குறைத்து, அவர்களுடைய வேலையை சுலபமாக்கும் வாயிலாகத்தான் மாவட்டம்தோறும், பல்மைரா காம்பிளக்ஸ் எனப்படும் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதனால் அவர்களுடைய வேலை வாய்ப்பு பாதிக்கக் கூடிய நிலை இல்லை. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர் கள், ஒரு கிராமத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு இதனைச் செயலாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூரில், அந்த இடத்தைச் சுற்றி பனைமரங்கள் அதிகமாக இருப்பதைக்கருதித்தான் அதனை முன் உதாரணமாக கிராமமாக எடுத்துப் பரிசீலனை செய்வதற் கான ஏற்பாடுகளை, அதிகாரிகள் அங்கே செய்து கொண்டிருக்கி றார்கள். அது நடைமுறைப்படுத்தவிருக்கிறது என்பதை தெரி வித்துக் கொள்கிறேன்.

முசிறி, துறையூ , லால்குடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம்

*வினா எண். 157—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்பு மிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி, துறையூர், லால குடி பகுதிகளுக்கு தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?